Sl. No. of Q.P.: 193

Unique Paper Code: 208161

Name of the Paper: Functional Grammar & Skills of Language

Name of the Course: B.A.( Prog.) Tamil-A

Semester: I Semester

F

Duration: 3.00 Hrs

Max. Marks: 75

.....................................................................................................................................

I. எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக. 7.5 x 2=15

1. எழுத்து என்றால் என்ன? விவரிக்க.

2. முதலெழுத்துகள் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

3. உயிரெழுத்துகளைச் சான்று தந்து விவரிக்க.

4. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

5. மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் இவை பற்றி விளக்குக.

II. எவையேனும் இரு வினாக்களுக்கு விடைதருக. 5 x 2=10

1. இலக்கிய வகைச் சொற்களைச் சான்றுகளுடன் விவரிக்க.

2. வினைச்சொல் என்றால் என்ன? சான்றுகளுடன் விளக்குக.

3. இயற்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

4. திரிசொல் என்றால் என்ன? சான்று தந்து விவரிக்க.

III. எவையேனும் இரு வினாக்களுக்கு விடைதருக. 5 x 2=10

1. வாக்கியம் என்றால் என்ன? விளக்குக.

2. தனி வாக்கியம் என்றால் என்ன? சான்றுகளுடன் விவரிக்க.

3. வல்லினம் மிகும் இடங்களைச் சான்று தந்து விளக்குக.

4. உடம்படு மெய் என்றால் என்ன? விவரிக்க.

IV. கடிதத்தின் அமைப்பை விவரிக்க. 10

(அல்லது)

உமது ஊர்க் கோயில் விழாவிற்கு வருவதைத் தெரிவித்து ஊரிலிருக்கும் உமது தந்தைக்கு ஒரு கடிதம் வரைக.

P.T.O

V. உரையாடல் உத்தி குறித்து விவரிக்க. 10

(அல்லது)

இரயில் நிலையத்தில் ஒருவர் மற்றொருவரிடம் உதவி கேட்கும் விதத்தில் அமைந்த ஓர் உரையாடலை எழுதுக.

VI. பத்தியின் அமைப்பை விவரிக்க. 10

(அல்லது)

முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து ஒரு பத்தி வரைக.

VII. கீழ் வரும் பத்தியைச் சுருக்கி வரைக: 10

குமரிநாடு வடக்கிலும் கிழக்கிலும் திருநெல்வேலி மாவட்டத்தையும் வடமேற்கில் கேரள மாநிலத்தையும் மேற்கிலும் தெற்கிலும் கடலையும் எல்லைகளாகக் கொண்டது. அசம்புமலை, மகேந்திரமலை, இரண்டாம் வரிமலை, மருத்துவாழ்மலை முதலியவை இக்குமரிநாட்டின் குறிப்பிடத்தகுந்த மலைகள் ஆகும். இங்குச் சிறு துறைமுகங்களாகக் குளச்சல், தேங்காய்ப்பட்டினம், மணக்குடி, கோவளம், லீபுரம் முதலியன விளங்குகின்றன. குமரிநாட்டின் வடகிழக்குப் பகுதியில் குன்றுகளும் கேற்கிலும் தென்மேற்கிலும் கடற்கரையும் குன்றுப் பகுதிகளும் கடலோரப் பகுதிகளுக்கு மத்தியில் பள்ளத்தாக்கும் உள்ளன. குமரிநாடு செழுமையின் நிலைக்களனாக விளங்கியது; தற்காலத்தில் அக்காலத்து செழுமை இல்லையென்றாலும் கூறும்படியாக ஓரளவு செழுமையுடன் விளங்குகின்றது. காணும் இடமெல்லாம் கண்ணுக்கெட்டாத தொலைவு வரை நெல்வயல்கள் காணப்பட்டன. தென்னஞ்சோலைகள், பழப்பொழில்கள், தோட்டக்காடுகள் முதலியன நிரம்பிக் காணப்படுகின்றன. அங்கங்கே நீர்நிறைந்த குளங்களும் தாமரைத்தடாகங்களும் சுனையூற்றுகளும் வாய்க்கால்களும் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தந்தன. சிலநேரங்களில் அக்காட்சிகளைத் தற்காலத்தில் அவ்வப்போது காணமுடியும். நீர் வளத்தால் செழுமையாகக் காட்சி தந்த குமரிநாடு நீர்வளம் குன்றிப்போனதால் செழுமை மற்றும் பசுமையும் குன்றிப் போய்விட்டன என்றே கூறவேண்டும்.